**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

**OS.No**.1001/2023 பெயர்-திலீப்குமார் நாள்.21.03.2024

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

ஜெயலட்சுமி அழைத்ததின்பேரில் நான் பணம் கொடுத்த இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். ஜெயலட்சுமி என்னுடைய உறவினர், அதாவது என்னுடைய மாமாவின் மனைவி ஆவார். பிரதிவாதி என்னுடைய உறவினர் என்றால் சரிதான். பண் கொடுத்தபோது நான் சாட்சியாக உடனிருந்தேன். நான் ஸ்கிரீன் தொழில் செய்து வருகிறேன். நான் ஈரோடு முனிசிபல் காலனியில் என் தந்தை வைத்துள்ள ஸ்கிரீன் தொழிலுக்கு நான் உதவியாக இருந்து வருகிறேன். பிரதிவாதி குமரேசனின் விலாசம் எனக்கு தெரியாது. அவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றும் எனக்கு தெரியாது. எனது அத்தை ஜெயலட்சுமி துணி கடைக்கு காலை 9 மணிக்கு சென்றுவிட்டு, மாலை 6 மணிக்குதான் வருவார் என்றால் சரிதான். பணம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள தேதி 28.07.2023 ஆகும். அது என்ன கிழமை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஞாயிற்றுகிழமை தவிர மற்ற நாட்களில் அவர் வேலைக்கு சென்றுவிடுவார் என்றால் அன்றைக்கு தொகை கொடுப்பதற்காக விடுமுறை எடுத்திருந்தார். மேற்படி தேதியில் அவர் வேலைக்கு செல்லவில்லை என்பதற்கு ஆதாரம் எதாவது உள்ளதா என்றால் இல்லை. ஜெயலட்சுமி கொடுத்ததாக சொன்ன பணம் எங்கிருந்து வந்தது என்பது எனக்கு தெரியாதா என்றால் அவர் சேமித்து வைத்திருந்ததாக சொன்னார். நான் காலை 10.30 மணிக்கு ஜெயலட்சுமியின் வீட்டில் இருந்தேன். மதியம் சுமார் 12.30 மணிக்குதான் பணம் கொடுக்கப்பட்டது. நான் சொல்வதுபோல் பிரதிவாதிக்கு பணம் கொடுப்பதற்கு வாதிக்கு எந்த வசதியும் கிடையாது என்றாலும், வாதி, பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காசோலையில் 01.07.2023 தேதி போடப்பட்டிருந்தது. அதை குமரேசன்தான் எழுதிக்கொடுத்தார். மேற்படி காசோலையை பிரதிவாதி குமரேசன் பூர்த்தி செய்யவில்லை என்றாலும், நாங்களாகவே காசோலை பூர்த்தி செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியின் கணவர் மேற்படி தேதியில் மாலையில் கடன் கொடுத்தார், அதுசமயமும் நான் உடனிருந்தேன்.